இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் *8898/2019*

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 20686/2018-லிருந்து எழுகிறது)

என். மோகன் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

ஆர். மது ... எதிர்மேல்முறையீட்டாளர்

<u>தீர்ப்புரை</u>

<u>மாண்புமிகு நீதியரசர் திருமதி ஆர். பானுமதி:</u>

அனுமதி வழங்கப்பட்டது.

2. இம்மேல்முறையீடானது, மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வினால் மே.வ. (எம்.டி.) எஸ்.ஆர். எண் 27805/2017-இன் உ.சீ.ம. (எம்.டி.) எண் 6566/2017-இல் பிறப்பிக்கப்பட்ட, 24.4.2018-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்பிற்குள்ளான உத்தரவிலிருந்து எழுகிறது. அவ்வுத்தரவின்மூலம், மு.வ. எண். 76/2015-இல் வழங்கப்பட்ட 9.10.2015-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கெதிராக முதல் மேல்முறையீடு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 546 நாட்கள் காலதாமதத்தை உயர் நீதிமன்றம் மன்னிக்க மறுத்திருக்கிறது.

3. இம்மேல்முறையீட்டைத் தாக்கல் செய்ய வழிகோலிய பொருண்மைகளின் சுருக்கம் பின்வருமாறு:-

மேல்முறையீட்டாளர்-மறுப்பாளர் ஒரு வணிகராவார், அவர் தேநீர் மற்றும் நில பரிவர்த்தனை தொழில் செய்கின்றார். எதிர்மனுதாரர்-வழக்காளரின் வழக்கு யாதெனில், வழக்காளர் வணிகத் தேவைக்காக ரூ.45,00,000/- நிதியுதவி கோரி

எதிர்மேல்முறையீட்டாளர்-வழக்காளரை அணுகினார். எதிர்மேல்முறையீட்டாளர் அவருக்கு ரூ.45,00,000/- கடன் கொடுத்தார், அதற்கு ஆவணங்கள் ஏதுமில்லை. எதிர்மேல்முறையீட்டாளரின் கூற்றின்படி, மேற்படி தொகையானது ஆண்டிற்கு 18% வட்டியுடன் திருப்பி அளிக்கப்படும் என ஒப்புக்கொள்ளப்பட்டது. மேல்முறையீட்டாளர் மேற்படி தொகையை இரண்டு மாதங்களுக்குள் திரும்பச் செலுத்த ஒப்புக்கொண்டார்; ஆனால், மேல்முறையீட்டாளர் அத்தொகையை திரும்பச் செலுத்தவில்லை. மறுபுறத்தில், மேல்முறையீட்டாளர் பின்தேதியிட்ட இரு காசோலைகளை எதிர்மேல்முறையீட்டாளருக்கு வழங்கியதாக கூறப்படுகிறது, ஒன்று ரூ.25,00,000/- தொகைக்கானது, மற்றொன்று ரூ.20,00,000/- தொகைக்கானது, மேற்படி காசோலைகள் 10.3.2015 அன்று வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்டபொழுது, "வரைவாளரால் செலுத்துதல்கள் நிறுத்தப்பட்டது" என்னும் மேற்குறிப்புடன் அவை திருப்பப்பட்டன. எதிர்மேல்முறையீட்டாளர்-வழக்காளர், திருச்சிராப்பள்ளி, கூடுதல் மாவட்ட நீதிபதி முன்பு மு.வ. எண் 76/2015-இல் உரிமையியல் வழக்கைத் தாக்கல் செய்தார். மேற்படி வழக்கானது, 9.10.2015 அன்று எதிரவர் வாரா வழக்காக தீர்ப்பளிக்கப்பட்டது.

4. **உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் நடைமுறைகள்**:- மேல்முறையீட்டாளர்-மறுப்பாளர், எதிரவர் வாரா தீர்ப்பாணையை நீக்கறவு செய்ய, உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழ் மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 276 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக்கோரி, காலவரையறைச் சட்டப்பிரிவு 5-இன் கீழ் மு.வ. எண் 76/2015-இல் வ.வி. எண் 327/2016-ஐ தாக்கல் செய்தார். மேற்படி விண்ணப்பத்தில், திருச்சியிலுள்ள மேல்முறையீட்டாளரின் பழைய முகவரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, அது வழங்கப்படாமல் திருப்பப்பட்டு, 9.10.20215 அன்று

எதிரவர் வாரா தீர்ப்பாணை வழங்கப்பட்டது என மேல்முறையீட்டாளர் கூறியுள்ளார். மேல்முறையீட்டாளர், 2014, ஜனவரியிலிருந்து சென்னையில் வசிக்கின்றார் என மேற்படி விண்ணப்பத்தில் கூறப்பட்டது. மேல்முறையீட்டாளர், 29.7.2016 அன்று கரூர் மாவட்டத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு (சி.சி.) எண் 240/2016-இல் ஒரு வழக்கில் முன்னிலையாக சென்றபொழுது, அவர் மு.வ. எண் 76/2015-இல் எதிரவர் வாரா தீர்ப்பாணை வழங்கலைக் குறித்து அவருக்கு தெரியவந்ததென கூறியுள்ளார். அதன்பின்னர், மேல்முறையீட்டாளர், எதிரவர் வாரா தீர்ப்பாணையை நீக்கறவு செய்ய நடவடிக்கைகள் எடுத்து, அதனை நீக்கறவு செய்ய, உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழ் மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 276 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக்கோரி, காலவரையறைச் சட்டப்பிரிவு 5-இன் கீழ் வ.வி. எண் 327/2016-ஐ தாக்கல் செய்தார். மேற்படி மனுவானது, 4.1.2017-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம், கூடுதல் மாவட்ட நீதிபதியால் தள்ளுபடி செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர், உயர் நீதிமன்றத்தின் முன்பு உ.சீ.ம. (ம.அ.) எண் 257/2017 (என்.பி.டி.)-ஐ தாக்கல் செய்ததன் மூலம், மேற்படி உத்தரவை எதிர்த்துரைத்தார். மேல்முறையீட்டாளர் சென்னையில் வசித்து வருகின்றார் என்ற அவருடைய வாதத்தை நிராகரித்து, அறிவார்ந்த தனியமர்வு நீதியரசர், 8.2.2017-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம் உ.சீ.ம. (ம.அ.) எண் 257/2017 (என்.பி.டி.)-இன் மேற்படி சீராய்வை தள்ளுபடி செய்தார். மேற்படி உத்தரவிற்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட சி.அ.ம. (உ) எண் 9829/2017, உச்ச நீதிமன்றத்தின் 7.4.2017-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது.

5. **மே.வ. (ம.அ.) எஸ்.ஆர். எண் 27805/2017-இல் மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட முதல் மேல்முறையீடு**:- உச்ச நீதிமன்றத்தினால் சீ.அ.ம. தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர், மேல்முறையீடு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 546 நாட்கள்

காலதாமத்தை மன்னிக்கவேண்டி, உ.ப.ம. (ம.அ.) எண் 6566/2017-இல் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்துடன், மு.வ. எண் 76/2015-இல் வழங்கப்பட்ட 9.10.2015-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்துரைத்து, மேல்முறையீட்டாளர்-மறுப்பாளர் மே.வ. (ம.அ.) ப.வ. எண் 27805/2017-இல் முதல் மேல்முறையீட்டைத் தாக்கல்செய்தார். மேல்முறையீட்டாளர், சென்னையில் வசிப்பிடம் கொண்டுள்ளார், அவருக்கு அழைப்பாணைகள் வழங்கப்படவில்லை, அழைப்பாணைகள் திருச்சி முகவரிக்கு கொண்டுசெல்லப்பட்டு, அதன்பின்னர், அவருக்கெதிராக 9.10.2015 அன்று எதிரவர் வாரா தீர்ப்பாணை வழங்கப்பட்டது என்னும் அதே காரணங்களை மேற்படி விண்ணப்பத்தில் வைத்து, காலதாமதத்தை மன்னிக்கவேண்டினார். உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழான முந்தைய நடவடிக்கைகளில், எதிரவர் வாரா தீர்ப்பாணையை நீக்கறவு செய்ய அதே காரணங்களைக் கூறினார். மேல்முறையீட்டாளரால் அவ்வாறாக கூறப்பட்ட காரணங்கள், விசாரணை நீதிமன்றம், உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் ஆகியவற்றால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் காலதாமத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பத்தை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. குறிப்பிட்ட காலத்தில் முதல் மேல்முறையீடு தாக்கல் செய்வதை காலங்கடந்து தேர்வு செய்துள்ளார் என்பதைக் குறிப்பிட்டு, முதல் மேல்முறையீடு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 546 நாட்கள் காலதாமதத்தை மன்னிப்பதற்கான விண்ணப்பத்தை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அதனால் பாதிப்படைந்து, மேல்முறையீட்டாளர் இம்மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளார்.

6. மேல்முறையீட்டாளருக்காக, திரு. எஸ். மகேந்திரனுடன் முன்னிலையாகும் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. சிங்கன் வாதிட்டதாவது, முதல் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட தாமதத்திற்கான போதுமான காரணத்தை

மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார், நற்கூறுகளின் அடிப்படையில் வழக்கை நடத்த, அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்பதாகும். மாற்று அழைப்பாணையை வழங்க எத்தனித்த திருச்சி முகவரியில் மேல்முறையீட்டாளர் வசிக்கவில்லை என்பதற்கான சான்றாவணத்தை அவர் முன்னிலைப்படுத்தினார்; அவ்வாறிருக்கையில், முதல் மேல்முறையீட்டுடன் தாக்கல் செய்யப்பட்ட காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பத்தை தள்ளுபடி செய்ததில் உயர் நீதிமன்றம் தவறிழைத்துவிட்டது என வாதிடப்பட்டது. உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழான விண்ணப்பமானது தள்ளுபடி செய்யப்பட்டது என்ற பொருண்மை இருந்தபொழுதிலும், உ.வி.மு.ச., பிரிவு 96(2)-இன் கீழ் முதல் மேல்முறையீடு தாக்கல் செய்யும் சட்டப்படியான உரிமை இன்னமும் உள்ளதென வாதிட்டு, மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் பிவ்சந்த்ரா சங்கர் மோர் -எதிர்- பாலு கங்காராம் மோர் மற்றும் பலர், *(2019) 6* ***எஸ்.சி.சி.*** *387* என்ற வழக்கின் முடிவின்மீது சார்ந்துநின்றார்.

7. அதற்குமுரணாக, மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடானது, காலவரையறையைக் கடந்ததாகும் மற்றும் தாமதமானது திருப்திகரமாக விளக்கப்படவில்லை என எதிர்மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. ஜெயந்த் முத்ராஜ் வாதிட்டார். எதிரவர் வாரா தீர்ப்பாணையை நீக்கறவு செய்வதற்காக, உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழ் விண்ணப்பம் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் முந்தைய விண்ணப்பமானது விசாரணை நீதிமன்றத்தினாலும், உயர் நீதிமன்றத்தினாலும் மற்றும் உச்ச நீதிமன்றத்தினாலும் ஏற்கப்படவில்லை; அதனால், அது இறுதியடைந்தது

என வாதிடப்பட்டது. முந்தைய நடவடிக்கைகளின் இறுதியடைந்த அதே வினாவை, மேல்முறையீட்டாளர் மறுபரிசீலனை செய்யமுடியாது என வாதிடப்பட்டது.

8. நாங்கள் வாதங்களை கவனமாகப் பரிசீலித்து, எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் கோப்பிலுள்ள ஆவணங்களை படித்தோம். இம்மேல்முறையீட்டில் பின்வரும் கருத்துகள் பரிசீலனைக்கு எழுகின்றன:-

(i) மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் தள்ளுபடிக்குப் பின்னர், உ.வி.மு.ச., பிரிவு 96(2)-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு நிலைக்கத்தக்கதா?

(ii) முதல் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்கும்வகையில், எதிரவர் வாரா தீர்ப்பாணையை நீக்கறவு செய்யும் நடவடிக்கைகளில் செலவழிக்கப்பட்ட நேரமானது, 1908-ஆம் ஆண்டைய காலவரையறைச் சட்டப்பிரிவு 5-இல் "போதுமான காரணம்" என்ற பொருளில் எடுத்துக்கொள்ளப்படமுடியுமா?

9. எதிரவர் வாரா தீர்ப்பாணையானது பிறப்பிக்கப்படும்பொழுது, மறுப்பாளர் இரு பரிகாரங்களைப் பெற்றுள்ளார் - (அ) அழைப்பாணைகள் வழங்கப்படவில்லை அல்லது வழங்கப்பட்டதெனில், வழக்கானது விசாரணைக்கு கூப்பிடப்படும்பொழுது, நீதிமன்றத்தில் முன்னிலையாவதினின்று, மறுப்பாளர், "போதிய காரணத்தினால்" தடுக்கப்பட்டார் என நீதிமன்றத்தை திருப்தியுற வைப்பதன்மூலம், எதிரவர் வாரா தீர்ப்பாணையை நீக்கறவு செய்ய உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழ் விண்ணப்பம் தாக்கல் செய்தல்;

(ஆ) உ.வி.மு.ச., பிரிவு *96(2)*-க்கிணங்க முதல் தீர்ப்பாணையிலிருந்து முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையான மேல்முறையீட்டைத் தாக்கல்செய்து, எதிரவர் வாரா தீர்ப்பாணையை நற்கூறுகளின் அடிப்படையில் எதிர்த்துரைத்தல்.

10. உ.வி.மு.ச., பிரிவு *96(2)*-இன் கீழ் மேல்முறையீடு தாக்கல்செய்யும் உரிமையானது, சட்டப்பூர்வ பரிகாரமாகும். மேல்முறையீட்டு உரிமையானது ஒரு வழக்கு நடைமுறை மட்டுமல்ல; ஆனால், அதுவொரு தனிப்பட்ட உரிமையாகும். எதிரவர் வாராது வழங்கப்பட்ட முதல் தீர்ப்பாணையை எதிர்த்துரைக்கும், உ.வி.மு.ச., பிரிவு *92*-இன் கீழான மேல்முறையீட்டு உரிமையாது, சட்டப்பூர்வ உரிமையாகயிருக்க, உ.வி.மு.ச., ஆணை IX, விதி *13*-இன் கீழான விண்ணப்பபமானது முன்பு தள்ளுபடி செய்யப்பட்டது என்ற காரணத்தினாலேயே, மறுப்பாளரின் சட்டப்பூர்வ உரிமையானது மறுக்கப்படமுடியாது.

11. பானு குமார் ஜெயின் -எதிர்- அர்ச்சனா குமார் மற்றும் ஒருவர், ***(2005) 1 எஸ்.சி.சி.*** *787* என்ற வழக்கில், உ.வி.மு.ச., ஆணை IX, விதி *13*-இன் கீழான விண்ணப்பமானது தள்ளுபடி செய்யப்பட்டபொழுதிலும், சட்டப்பிரிவு *96(2)*-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட முதல் மேல்முறையீடானது நிலைக்கத்தக்கதா*?* என்னும் வினாவானது உச்ச நீதிமன்றத்தினால் பரிசீலிக்கப்பட்டது. மேல்முறையீட்டுரிமையானது சட்டப்பூர்வ உரிமை என்றும், வழக்காடுவோரின் அத்தகைய உரிமை பறிக்கப்படமுடியாது என்றும், உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்து பின்வருமாறு தீர்ப்பளித்தது:-

> *"36. ....தீர்ப்பாணையின் சரித்தன்மையை முதல் மேல்முறையீட்டில் வினவும் உரிமையானது சட்டப்பூர்வ உரிமையாகும். சட்டம் வெளிப்படையாகவோ அல்லது தேவையான குறிப்பின் மூலமோ*

அவ்வாறு கூறினாலன்றி, அத்தகைய உரிமையானது துண்டிக்கப்படக்கூடாது மற்றும் அதன்மீது எந்தவித தடையும் நிர்ணயிக்கப்படக்கூடாது. (பார்க்க: தீபல் கிரிஷ்பாய் சோனி -எதிர்- யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் & கோ. லிமிடெட், (2004) 5 எஸ்.சி.சி. 385 மற்றும் சந்திரவதி பி.கே. -எதிர்- சி.கே. சாஜி, (2004) 3 எஸ்.சி.சி. 734)

.....

38. இரு கூறுகள், எங்களுடைய கருத்தில், வழக்கானது விசாரணை நீதிமன்றத்தினால் எதிரவர் வாரா தீர்ப்பாணை உத்தரவின் சரித்தன்மையையோ அல்லது பிறவற்றையோ மற்றும்/அல்லது நீதிமன்றத்தின் முன்பு மறுப்பாளர் முன்னிலையாகாமைக்கான சரியான காரணத்தையோ வாதிட மறுப்பாளர் அனுமதிக்கப்படக்கூடாது, வழக்காளரால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள், அவருக்காதரவாக தீர்ப்பளிக்கப் போதுமானவையல்ல என்றோ அல்லது வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றோ, அவரால் சட்டப்பிரிவு 96(2)-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட முதல் மேல்முறையீட்டில் நற்கூறுகளினடிப்படையில் வாதிடுவது அவரைச் சார்ந்ததாகும் என தீர்ப்பளிப்பதன் மூலம் தீர்வு செய்யப்படமுடியும். அத்தகைய மேல்முறையீட்டில் நீதிமன்றத்தின் சட்டவரம்பின்மையுங்கூட சாத்தியமான வாதமாக இருக்கமுடியும். எனினும்,

ராணி சௌதரி *(1982) 2* எஸ்.சி.சி. *596*, பி. கிரண் குமார், *(2002) 5* எஸ்.சி.சி. *161* மற்றும் ஷ்யாம் சுந்தர் சர்மா -எதிர்- பன்னாலால் ஜெய்ஸ்வால், *(2005) 1* எஸ்.சி.சி. *436* ஆகிய வழக்குகளில் இந்நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்டதுபோன்று, சட்டத்தின் ஆணை IX, விதி *13* கண்டிப்பான பொருள்விளக்கம் பெறுமென திரு. சௌதரி அவ்விதிக்கு அளித்த "விளக்கத்திற்கு" நாங்கள் உடன்படுகின்றோம்."

12. பானு குமார் ஜெயின் மற்றும் பிற தீர்ப்புரைகளைப் பார்வையிட்டு, மறுப்பாளர், உ.வி.மு.ச., ஆணை IX, விதி *13*-யோ, உ.வி.மு.ச., பிரிவு *96(2)*-இன் கீழ் மேல்முறையீட்டையோ ஆக இரு நடவடிக்கைகளையும் ஏதேனும் ஒன்றாக மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவித்த பின்னர், நீர்ஜா ரியல்டார்ஸ் *(பி)* லிமிடெட் -எதிர்- ஜங்லு *(இறந்தவர்)* சட்டப்பூர்வ பிரதிநிதி மூலமாக, ***(2018) 2 எஸ்.சி.சி. 649*** என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது:-

> *"17.* தனக்கெதிராக எதிரவர் வாரா தீர்ப்பாணை வழங்கப்பட்ட மறுப்பாளர் இரு தேர்வுரிமைகளைப் பெற்றுள்ளார். முதலாவது மேல்முறையிடுதல், இரண்டாவது ஆணை IX, விதி *13*-இன் கீழ் விண்ணப்பித்தல், மறுப்பாளர் இரு நடவடிக்கைகளையும் ஏதேனும் ஒன்றாக ஒரே நேரத்தில் மேற்கொள்ளமுடியும். ஆணை IX, விதி *13*-இன் கீழ் விண்ணப்பித்தல் மூலம், மேல்முறையீட்டுரிமையானது பறிக்கப்படவில்லை. மேல்முறையீடானது தள்ளுபடி செய்யப்பட்டு, அதன்விளைவாக,

மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுடன் எதிரவர் வாரா தீர்ப்பாணை இணைகிறதெனில், ஆணை IX, விதி 13-இன் கீழான மனு நிலைக்கத்தக்கதல்ல. ஆணை IX, விதி 13-இன் கீழான விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்பொழுது, மறுப்பாளருக்கான பரிகாரமானது, ஆணை 43, விதி 1-இன் கீழாகும். எனினும், அத்தகைய மேல்முறையீடானது ஒருமுறை தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டால், அதே வாதமானது பிரிவு 96-இன் கீழான முதல் மேல்முறையீட்டில் எழுப்பமுடியாது. பானு குமார் ஜெயின், (2005) 1 எஸ்.சி.சி. 787 என்ற வழக்கில் மூன்று நீதியரசர்கள் அடங்கிய அமர்வின் முடிவானது, ரபீந்திர சிங் -எதிர்- ∴பைனான்சியர் கமிஷனர், கோ-ஆப்ரேஷன், (2008) 7 எஸ்.சி.சி. 663 என்ற வழக்கில் மூன்று நீதியரசர்கள் அடங்கிய மற்றொரு அமர்வினாலும் மற்றும் மகேஷ் யாதவ் -எதிர்- ராஜேஷ்வர் சிங், (2009) 2 எஸ்.சி.சி. 205 என்ற வழக்கில் இரு நீதியரசர்கள் அடங்கிய அமர்வினாலும் பின்பற்றப்பட்டுள்ளன....." **[அடிக்கோடிட்டவை சேர்க்கப்பட்டது]**

13. பிவ்சந்திரா சங்கர் மோர் என்ற வழக்கில் பானு குமார் ஜெயின் என்ற வழக்கை பார்வையிட்ட பின்னர், உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் வரம்பு மற்றும் உ.வி.மு.ச., பிரிவு 96(2)-இன் கீழான மேல்முறையீட்டுரிமை ஆகியவற்றைப் பரிசீலித்து இந்நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது:-

"11. உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் வரம்பு மற்றும் உ.வி.மு.ச., பிரிவு 96(2) ஆகியவை முற்றிலும் வேறுபட்டவை என்பது குறிப்பிடப்படவேண்டியதாகும். உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழ் தாக்கல் செய்யப்படும் விண்ணப்பத்தில், அழைப்பாணைகள் முறையாக வழங்கப்பட்டனவா? அல்லது இல்லையா? அல்லது உரிமையியல் வழக்கு கூப்பிடப்படும்பொழுது மறுப்பாளர் முன்னிலையாவதினின்று "போதிய காரணத்தினால்" தடுக்கப்பட்டாரா? என்பனவற்றை நீதிமன்றம் பார்க்கவேண்டியிருக்கிறது. மறுப்பாளருக்கு அழைப்பாணைகள் முறையாக வழங்கப்படவில்லை என்றோ அல்லது அவர் "போதிய காரணத்தினால்" தடுக்கப்பட்டார் என்றோ நீதிமன்றம் திருப்தியுறுமானால், நீதிமன்றமானது எதிரவர் வாரா தீர்ப்பாணையை நீக்கறவு செய்து, வழக்கை அதன் அசல் நிலைக்கு உயிர்ப்பிக்கலாம். உ.வி.மு.ச., பிரிவு 96(2)-இன் வாசகங்களின்படி, எதிரவர் வாராது பிறப்பிக்கப்பட்ட அசல் தீர்ப்பாணையிலிருந்து மேல்முறையீடு எழுகிறது. உ.வி.மு.ச., பிரிவு 96(2)-இன் கீழ் தாக்கல் செய்யப்படும் முறையான மேல்முறையீட்டில், மேல்முறையீட்டு நீதிமன்றமானது, தீர்ப்பாணையின் நற்கூறுகளை ஆயும் பரந்த சட்டவரம்பைக் கொண்டுள்ளது. விசாரணையின் வரம்பானது, இரு விதிகளின் கீழும் முற்றிலும் வேறுபட்டதாகும். உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழான மறுப்பாளருடைய

விண்ணப்பமானது தள்ளுபடி செய்யப்படுமெனில், உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழ் அவர் பரிகாரத்தை நாடிய காரணத்தினாலேயே, அது, மறுப்பாளர் மேல்முறையீடு தாக்கல் செய்வதினின்று தடுக்கவில்லை."

12. உ.வி.மு.ச., பிரிவு 96(2)-இன் கீழான மேல்முறையீட்டுரிமையானது ஒரு சட்டப்பூர்வ உரிமையாகும் மற்றும் உ.வி.மு.ச.. ஆணை IX, விதி 13-இன் கீழ் அவரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பமானது தள்ளுபடி செய்யப்பட்ட காரணத்தினாலேயே, மறுப்பாளர் மேல்முறையிடும் சட்டப்பூர்வ உரிமை பறிக்கப்படமுடியாது. பானு குமார் ஜெயின் -எதிர்- அர்ச்சனா குமார் மற்றும் ஒருவர், (2005) 1 எஸ்.சி.சி. 787 என்ற வழக்கில், உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழ் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டு மற்றும் அது தள்ளுபடி செய்யப்பட்டது என்கின்றபொழுது, முதல் மேல்முறையீடு நிலைக்கத்தக்கதா? என்ற வினாவை உச்ச நீதிமன்றம் பரிசீலித்தது. மேல்முறையீட்டுரிமையானது சட்டப்பூர்வ உரிமை, வழக்காடுபவரின் அத்தகைய உரிமையானது பறிக்கப்படமுடியாது என கருத்து தெரிவித்து, கீழ்க்காணுமாறு பத்திகள் (36) மற்றும் (38)-இல் தீர்ப்பளிக்கப்பட்டது:-

> 36. ....தீர்ப்பாணையின் சரித்தன்மையை முதல் மேல்முறையீட்டில் வினவும் உரிமையானது சட்டப்பூர்வ

உரிமையாகும். சட்டம் வெளிப்படையாகவோ அல்லது தேவையான குறிப்பின் மூலமோ அவ்வாறு கூறினாலன்றி, அத்தகைய உரிமையானது துண்டிக்கப்படக்கூடாது மற்றும் அதன்மீது எந்தவித தடையும் நிர்ணயிக்கப்படக்கூடாது. (பார்க்க: தீபல் கிரிஷ்பாய் சோனி -எதிர்- யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் கோ. லிமிடெட், *(2004) 5* எஸ்.சி.சி. *385* மற்றும் சந்திரவதி பி.கே. -எதிர்- சி.கே. சாஜி, *(2004) 3* எஸ்.சி.சி. *734)*

....."

14. எதிரவர் வாரா தீர்ப்பாணை வழங்கப்பட்ட மறுப்பாளர், இரண்டு தேர்வுரிமையைப் பெற்றுள்ளார். முதல் தேர்வுரிமையானது, உ.வி.மு.ச., ஆணை IX, விதி *13*-இன் விண்ணப்பம் தாக்கல் செய்தல் மற்றும் இரண்டாவது தேர்வுரிமையானது, உ.வி.மு.ச., பிரிவு *96(2)*-இன் கீழ் மேல்முறையீடு தாக்கல் செய்தலாகும். பரிசீலிக்கப்படவேண்டிய வினா யாதெனில், இரு தேர்வுரிமைகளும் சமகாலத்தில் செயல்படுத்தப்படவேண்டியனவா? அல்லது ஒன்றன்பின் ஒன்றாகவும் செயல்படுத்தக் கூடியவையா? என்பதாகும். பழிக்கு அஞ்சா வழக்காடுவோர், ஒருவேளை, முதலில் உ.வி.மு.ச., ஆணை IX, விதி *13*-இன் கீழ் விண்ணப்பத்தை தாக்கல்செய்து, அதனை உச்ச நீதிமன்றம் வரை கொண்டுசெல்லலாம். அதன்பின்னர், எதிரவர் வாரா தீர்ப்பாணையை எதிர்த்து, உ.வி.மு.ச., பிரிவு *96(2)*-இன் கீழ் மேல்முறையீடு தாக்கல்

செய்ய தேர்வு செய்யலாம். அந்நிகழ்வில் வழக்காளருக்கு குறிப்பிடத்தக்க நேரம் வீணாக்கப்படும். பரிசீலனைக்கு எழும் வினா யாதெனில், சமகாலமாக வழங்கப்படும் பரிகாரங்கள், ஒன்றன் பின் ஒன்றாக பரிகாரங்களாக மாற்றப்படமுடியுமா? என்பதாகும்.

15. உ.வி.மு.ச., பிரிவு 96(2)-இன் கீழான மேல்முறையீடானது சட்டப்பூர்வ உரிமையாகும். உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட முந்தைய விண்ணப்பமானது தள்ளுபடி செய்யப்பட்டது என்ற அடிப்படையிலேயே, மறுப்பாளரின் சட்டப்பூர்வ உரிமையானது பறிக்கப்படமுடியாது. ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைச் சார்ந்து, சட்டப்பிரிவு 96(2)-இன் கீழ் மேல்முறையீட்டு பரிகாரத்தை மறுப்பாளர் நாடுவதில், காலங்கடத்தும் உத்தியை கையாண்டாரா? அல்லது நம்பகமான காரணம் இல்லையா? என்பது பரிசீலிக்கப்படவேண்டியுள்ளது. மறுப்பாளர் காலங்கடத்தும் உத்தியைக் கையாண்டுள்ளார் என்றோ அல்லது நம்பகமான காரணம் இல்லையென்றோ, நீதிமன்றம், திருப்தியுறும்பட்சத்தில், உ.வி.மு.ச., பிரிவு 96(2)-இன் கீழ் முதல் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க மறுக்கலாம். ஆனால், மறுப்பாளர், உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழ் நம்பகமான பரிகாரத்தை நாடியிருந்து, உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழ் பரிகாரம் காண்பதில் செலவழிக்கப்பட்ட நேரத்திற்கான காலதாமதத்தை மன்னிக்க நீதிமன்றம் மறுக்குமெனில், மறுப்பாளரின் மேல்முறையீட்டுக்கான சட்டப்பூர்வ உரிமையானது பறிக்கப்படும். உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழான விண்ணப்பத்தின் தள்ளுபடிக்குப் பின்னர், சட்டப்பிரிவு 96(2)-இன் கீழ் மேல்முறையீட்டுப் பரிகாரத்தை நாடுவதில், மறுப்பாளர், காலங்கடத்தும் உத்தியை கையாண்டாரா? அல்லது நம்பகமான

காரணம் இல்லையா? என்ற வினாவானது, ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைச் சார்ந்து பரிசீலிக்கப்படவேண்டியுள்ளது.

16. மறுப்பாளர், எதிரவர் வாரா தீர்ப்பாணைக்கெதிராக உ.வி.மு.ச., பிரிவு 96(2)-இன் கீழ் மேல்முறையீடு தாக்கல்செய்து அவை தள்ளுபடி செய்யப்பட்டிருக்குமெனில், அதன்பின்னர் மறுப்பாளர், உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழ் விண்ணப்பம் தாக்கல் செய்யமுடியாது. ஏனெனில், சட்டப்பிரிவு 96(2)-இன் கீழான மேல்முறையீடானது தள்ளுபடி செய்யப்பட்டபின்னர், வழக்கில் வழங்கப்பட்ட முதன்மை தீர்ப்பாணையானது, மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பாணையுடன் இணைகிறது. எனவே, உ.வி.மு.ச., பிரிவு 96(2)-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டின் தள்ளுபடிக்குப்பின்னர், உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழான பரிகாரத்தை மேல்முறையீட்டாளர் பயன்படுத்தமுடியாது.

17. தற்போதைய வழக்கில், எதிர்மேல்முறையீட்டாளர், வட்டியும், அசலுமாக சேர்த்து ரூ.46,98,500/-ஐ வசூலிப்பதற்காக, மு.வ. எண் 76/2015-இல் பணவழக்கைத் தாக்கல் செய்துள்ளார். அதில் 9.10.2015 அன்று எதிரவர் வாரா தீர்ப்பாணை வழங்கப்பட்டது. தீர்ப்பாணை நிறைவேற்றுவதற்காக, நி.ம. எண் 95/2016-ங்கூட தாக்கல் செய்யப்பட்டது. ஏற்கெனவே குறிப்பிட்டதுபோன்று எதிர்மேல்முறையீட்டாளர், எதிரவர் வாரா தீர்ப்பாணையை நீக்கறவு செய்ய விண்ணப்பிப்பதில் ஏற்பட்ட 276 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக்கோரி, வ.வி. எண் 327/2016-ஐ தாக்கல் செய்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தில், மேல்முறையீட்டாளர், சென்னையில் வசித்துவருவதாகவும், அறிவிப்போ திருச்சியில் வழங்கப்பட்டது என்றும், எனவே, மு.வ. எண் 76/2015-இல் மேற்படி வழக்கானது, திருச்சிராப்பள்ளி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது குறித்து, தான்

அறிந்திருக்கவில்லையென்றும் மற்றும் எதிரவர் வாரா தீர்ப்பாணையானது 9.10.2015 அன்று வழங்கப்பட்டது என்றும் மேல்முறையீட்டாளர் கூறியுள்ளார். 29.7.2016 அன்று கரூர் நீதிமன்றத்தில் ஆ.ப.வ. எண் 240/2016-இல் முன்னிலையான நேரத்தில்தான், எதிரவர் வாரா தீர்ப்பாணை மற்றும் நி.ம. ஆகியவைக் குறித்து தனக்குத் தெரியவந்தது என மேல்முறையீட்டாளர் மேலும் கூறியுள்ளார். ஏற்கெனவே விவாதித்ததுபோன்று, எதிரவர் வாரா தீர்ப்பாணையை நீக்கறவு செய்யக்கோரி, விண்ணப்பத்தில் ஏற்பட்ட 276 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக்கோரி மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி விண்ணப்பமானது, 4.1.2017-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட சீராய்வு மற்றும் சி.அ.ம.-வுங்கூட தள்ளுபடி செய்யப்பெற்றன.

18. அதன்பின்னர், மேல்முறையீட்டாளர், முதல் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 546 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பத்துடன் முதல் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தார். ஏற்கெனவே குறிப்பிட்டதுபோன்று எதிரவர் வாரா தீர்ப்பாணையை நீக்கறவு செய்ய விண்ணப்பம் செய்வதில் 276 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டது. உ.வி.மு.ச., ஆணை IX, விதி 13-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நடைமுறைகளை தொடர்வதில் 270 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டது. இவ்வாறாக, முதல் மேல்முறையீடு தாக்கல் செய்வதில் ஒட்டுமொத்தமாக 546 நாட்கள் காலதாமதம் இருந்து வந்துள்ளது. காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பத்தில், ஐயத்திற்கிடமின்றி, முந்தைய வழக்கு நடவடிக்கைகளில் ஏற்கப்படாததும், எதிரவர் வாரா தீர்ப்பாணையை நீக்கறவு செய்ய கோரி காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 5-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் கூறப்பட்டதுமான அதே காரணத்தை மேல்முறையீட்டாளர் கூறியுள்ளார்.

19. மேல்முறையீட்டாளர்-மறுப்பாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் சமர்ப்பித்தது யாதெனில், பெருந்தொகையான ரூ.*45,00,000/-*ஆனது ரொக்கமாகச் செலுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது, அது அவருக்கு அத்தகைய பரிவர்த்தனையின் நம்பகத்தன்மையைக் குறித்து கடுஞ்சந்தேகத்தை எழுப்புகிறது என்பதாகும். அதனை எதிர்த்துரைத்து எதிர்மேல்முறையீட்டாளர்-வழக்காளருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் சமர்ப்பித்தது யாதெனில், மேல்முறையீட்டாளரால் எதிர்மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக, தொகை ரூ.*25,00,000/-*க்கு ஒன்றும் மற்றும் ரூ.*20,00,000/-*க்கு மற்றொன்றுமாக இரண்டு பின்தேதியிடப்பட்ட காசோலைகள் வழங்கப்பட்டதன்மூலம் ரூ.*45,00,000/-* கைமாற்றுக் கடனாக வழங்கப்பட்டது உறுதிசெய்யப்படுகிறது என்பதாகும். நாங்கள், தரப்பினர்களின் வாதங்களின் நற்கூறுகளை ஆராய விரும்பவில்லை. மொத்தத்தில் குறிப்பிடப்படவேண்டியது யாதெனில், மேல்முறையீட்டாளர், ஒரே நேரத்தில் முதல்மேல்முறையீட்டுடன், உ.வி.மு.ச., ஆணை IX, விதி *13*-இன் கீழான விண்ணப்பத்தையும் தாக்கல் செய்ய அறிவுறுத்தப்பட்டிருக்கவேண்டும். எனினும், *13.8.2018*-ஆம் தேதியிடப்பட்ட இந்நீதிமன்றத்தின் உத்தரவிற்கிணங்க, மேல்முறையீட்டாளர் ரூ.*25,00,000/-*ஐ வைப்பீடு செய்வதன்மூலம் தன்னுடைய நேர்மையை வெளிப்படுத்தியுள்ளார். அந்தத் தொகையான ரூ.*25,00,000/-*ஆனது எதிர்மேல்முறையீட்டாளர்/வழக்காளரால் பெற்றுக்கொள்ளும்படியாக அனுமதிக்கப்பட்டது. வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் மற்றும் நீதியின் நலன் ஆகியவற்றைப் பரிசீலித்து, எங்களுடைய கருத்தில், பணத்தை வசூலிப்பதற்கான வழக்கில் தன்னுடைய மறுப்பு வாதங்களை வைக்க, மேல்முறையீட்டாளர் தகுதியுடையவராகிறார். ஆனால் இந்த வாய்ப்பைப்பெற,

காலதாமதத்தை மன்னிப்பதற்காக, முன்நிபந்தனையாக அவர் ரூ.20,00,000/-ஐ வைப்பீடு செய்யவேண்டும். இந்த நிலைப்பாடுகளில், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையானது நீக்கறவுச் செய்யத்தக்கதாகிறது.

20. மேல்முறையீட்டாளர், ரூ.20,00,000/-ஐ திருச்சிராப்பள்ளி, விசாரணை நீதிமன்றம்/முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் மு.வ. எண் 76/2015-இல் 28.2.2020 அன்றோ அல்லது அதற்கு முன்போ வைப்பீடு செய்யவேண்டும் என்ற நிபந்தனையுடன் முதல் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 546 நாட்கள் காலதாமதமானது மன்னிக்கப்படுகிறது, தவறும்பட்சத்தில், காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பம் தள்ளுபடியாகிறது. அத்தகைய ரூ.20,00,000/-க்கான தொகையானது வைப்பீடு செய்யப்பட்டதும், அத்தொகையானது தன்னிச்சையாக புதுப்பிக்கப்பெறும் விதியுடன் ஆறு மாத காலத்திற்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் வைப்பீடு செய்யப்படவேண்டும். ரூ.20,00,000/-க்கான வைப்பீடு மற்றும் ரூ. 25,00,000/-க்கான முந்தைய வைப்பீடு ஆகியவை மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புரைக்கு உட்பட்டவையாகும். ரூ.20,00,000/- வைப்பீடு செய்யப்பட்டதும், மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வினால் மே.வ. எண் (ம.அ.) எஸ்.ஆர். எண் 27805/17-இல் உ.ப.ம. எண் (ம.அ.) எண் 6566/17-இல் வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையானது நீக்கறவு செய்யப்படுகிறது மற்றும் இம்மேல்முறையீடானது அனுமதிக்கப்படுகிறது. மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதம் மன்னிக்கப்படுகிறது. மேல்முறையீடானது கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, உயர் நீதிமன்றமானது சட்டத்திற்கிணங்க வழக்கை நடத்தவேண்டும். நாங்கள், வழக்கின் நற்கூறுகள் மீது எக்கருத்தையும் தெரிவிக்கவில்லை என்பதை தெளிவுபடுத்துகின்றோம். இந்நீதிமன்றத்தினாலும் அல்லது உயர் நீதிமன்றத்தினாலும் தெரிவிக்கப்பட்ட கருத்துகள்

எதனாலும் செல்வாக்கு செலுத்தப்படாமல் அல்லது பாதிக்கப்படாமல், மாற்றுமுறையாவணங்கள் சட்டம், பிரிவு 138-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது தகுதியின் அடிப்படையில் தொடரப்படவேண்டும் என்பதையுங்கூட தெளிவுப்படுத்தப்படுகிறது.

மாண்புமிகு நீதியரசர் திருமதி ஆர். பானுமதி
மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.எஸ். போபண்ணா
மாண்புமிகு நீதியரசர் திரு. உறிரிஷிகேஷ் ராய்

புது தில்லி,
21.11.2019.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."